கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பிக்கும் வகையில், தூத்துக்குடி மாநகராட்சி சார்பில், நேற்று (28.10.2023) மாநகராட்சிக்குட்பட்ட கிரேட் காட்டன், அசோக் நகர், லையன்ஸ் டவுன் புல்தோட்டம் மற்றும் நந்தகோபாலபுரம் ஆகிய 4 இடங்களில் சீர்மிகு நகரத் திட்டத்தின்கீழ் ரூபாய் 6 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள இறகுப்பந்து உள்விளையாட்டரங்கம் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்களை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், சமூக நலன் – மகளிர் உரிமைத்துறை அமைச்சருமான பி.கீதா ஜீவன் தலைமையில், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் கோ.லட்சுமிபதி, மாநகராட்சி மேயர் பெ.ஜெகன் ஆகியோர் முன்னிலையில், விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ்குமார், மாநகராட்சி துணை மேயர் செ.ஜெனிட்டா, கிழக்கு மண்டலத் தலைவர் கலைச்செல்வி, மாமன்ற உறுப்பினர்கள் சுரேஷ்குமார், ரிக்டா, மாநகரப் பொறியாளர் பாஸ்கர், துணை மாநகரப் பொறியாளர் சரவணன், அரசு அலுவலர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பலர் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., து.மூர்த்தி, மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விஸ்வநாதன், சட்ட மன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் பரிதி இளம் சுருதி, கே.எஸ்.எம்.நாதன், உமாகாந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

திருவள்ளூரில் நவம்பர் 5ஆம் தேதி நடைபெறும்!

வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் அனைவரும் பங்கேற்பீர்!

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவு என அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல் !

திருவள்ளூர், அக்.29

திருவள்ளூரில் வருகிற நவம்பர் 5ஆம் தேதி நடைபெறும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டத்தில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அனைவரும் அணி திரண்டு பங்கேற்பது என குன்றத்தூரில் நேற்று நடைபெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குன்றத்தூர், செங்குந்தர் திருமண மண்டபத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர்கள் பரிதி இளம் சுருதி, கே.எஸ்.நாதன், உமாகாந்தன், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆதிமாறன், ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன்,

பகுதி செயலாளர்கள் பி.குணாளன், என்.சந்திரன், வே.கருணாநிதி, ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன், இ.எஸ்.பெர்னாட், செம்பாக்கம் சுரேஷ், மாடம்பாக்கம் நடராஜன், பெருங்களத்தூர் சேகர், எஸ்.இந்திரன், து.காமராஜ்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், வி.எஸ்.ஆராமுதன், ஏ.வந்தேமாதரம், மூவரசம்பட்டு ரவி, ஆப்பூர் பி.சந்தானம், நகரச் செயலாளர்கள் எஸ்.நரேந்திரன், ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்திய மூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ், ஆர்.சதீஷ்குமார்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.டி.பூபாலன், சீதா ஆனந்தன், க.தேவேந்திரன், மூவரசம்பட்டு சதீஷ், எம்.செல்வகுமார், ம.கணேஷ்பாபு, செ.அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், வீ.விஜயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலகண்ணன், கே.மணிகண்டன், கோ.ஜானகிராமன், எல்.பிரபு, என்.கனகராஜ், பா.ஞானப்பிரகாசம், ஜெயராம் மார்த்தாண்டன், தி.க.பாஸ்கரன், எஸ்.ஆல்பர்ட், ஆர்.கோவிந்தன், வி.ரவிச்சந்திரன், ஜா.செந்தில் தேவராஜ், த.வினோத்குமார், டி.பி.செந்தில்குமார், ஜி.தாம்பரம் நாராயணன், ஆர்.கே.சையத்யூசூப், பொன்.ரமேஷ் கவி, டி.எஸ்.எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், ஜான் தினகரன், உதயா கருணாகரன், சசிகலா, கே.ஆர்.ஆனந்தன், தாம்பரம் மாநகர இளைஞரணி அமைப்பாளர் பி.கே.ஏ.சத்தியபிரபு,

தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள் அனகை நரேஷ் கண்ணா, சேலையூர் சதாசிவம், செம்பாக்கம் கண்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

முடிவில் கூட்ட தீர்மானங்களை விளக்கி மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

வருகிற 5.11.2023 ஞாயிற்று கிழமை அன்று ஒரு நாள் முழுவதும் திருவள்ளூரில் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் நடைபெறும் வாக்குசாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டத்திற்கு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 6 சட்ட மன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் ஏற்கனவே மாவட்ட கழகம் மூலம் நியமனம் செய்யப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் அனைவரையும் அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் திருவள்ளூரில் நடைபெறும் வாக்குசாவடி நிலை முகவர்கள் (BLA2) பயிற்சி பாசறை கூட்டத்திற்கு, வாகனங்கள் மூலம் காலை 8.30 மணிக்கெல்லாம் திருவள்ளூருக்கு அழைத்து சென்று பங்கேற்க செய்து கூட்டத்தை சிறப்பிப்பது என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

பொது மக்களின் மற்றும் நலச்சங்கங்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, 10 வீடுகளுக்குள் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளின் பொது பயன்பாட்டு மின் கட்டணம் யூனிட் ஒன்றிக்கு ரூ.2.50 குறைத்து அறிவித்ததற்காகவும்,

திருப்போரூர் வட்டத்தில் உள்ள நாவலூர் சுங்கச்சாவடியை அகற்றியதற்கும், 2006 2011 வரை 5 ஆண்டு கால கலைஞர் அவர்களின் நல்லாட்சியில், ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்டத்தில் 16,000 ஏழை மக்களுக்கு வழங்கப்பட்ட பட்டாக்களை முறையாக அரசு பதிவேட்டில் பதிய ஆணையிட்டதற்கும், மாவட்ட மக்களின் சார்பிலும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க சார்பிலும்,

நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய ஒப்பாரும் மிக்காரும் இலா நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கு பாராட்டுக்களையும், நன்றியினையும் இருகரம் கூப்பி வணங்கி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய தேர்தல் ஆணையம் 1.1.2023ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாக கொண்டு, வாக்காளர் பட்டியல் சுருக்க முறை திருத்தம் செய்யும் பணிகளுக்காக அக்டோபர் 27ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் அடங்கிய ஆலந்தூர், திருப்பெரும்புதூர், பல்லாவரம், தாம்பரம், செங்கல்பட்டு, திருப்போரூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலை உடனடியாக அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்களிடம் பிரித்து வழங்கப்பட்டது.

அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் உடனடியாக அந்த வாக்காளர் பட்டியலை பிரித்து, வார்டு - கிளைக் கழகச் செயலாளர்கள் மூலம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளிடம் தந்து ஒவ்வொரு வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் இன்றிய மையாப் பணியில் ஈடுபடுவது என்றும்,

வருகிற 4.11.2023, 5.11.2023, 18.11.2023, 19.11.2023 ஆகிய 4 நாட்கள் மாவட்டம் முழுவதும் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் புதிய வாக்காளர்களை படிவம் 6ல் சேர்த்து, இறந்துபோன - இடம் மாறிய வாக்காளர்கள் படிவம் 7இல் நீக்கிடும் பணியில் ஈடுபட்டு அப்படி சேர்த்த - நீக்கல் படிவங்களை வழங்கிடும் பணியில் வாக்குச்சாவடி வாரியாக கழகத்தினர் அனைவரும் இணைந்து மும்முரமாக ஈடுபட வேண்டும் என காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகம் ஒரு மனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் - இரா. நரேந்திரன் சிறப்புரை!

குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. பாக நிலை முகவர்கள் (BLA 2) கூட்டம்!

படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு! ஏ.வந்தேமாதரம் தலைமை!

காஞ்சிபுரம், அக்.29

குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட பாக நிலை முகவர்கள் (BLA 2) கூட்டம் இன்று (29.10.2023 ஞாயிற்றுக்கிழமை) மாலை 04.00 மணியளவில் பெரிய பணிச்சேரி கோவிந்தராஜ் திருமண மண்டபத்தில் சிறுகுறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன், ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர் இரா. நரேந்திரன் சிறப்புரையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சரஸ்வதிமனோகரன், குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய துணை பெருந்தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொள்ள இருப்பதால் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், பாக நிலை முகவர்கள் (BLA 2), சிறப்பு அழைப்பாளர்கள், கிளை கழக செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1) நவம்பர் 5 கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் பங்கேற்கும் பாக நிலை முகவர்கள் கூட்டம் (BLA 2). 2) நாடாளுமன்ற தேர்தல் பணி. 3) கழக வளர்ச்சி.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தெரிவித்துள்ளார்.

'இந்தியா' 'பாரத்' பெயர்; வீண் சர்ச்சை வேண்டாம்!

'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கருத்து!

சென்னை, அக். 29-

'இந்தியா' பாரத் பெயர் விவகாரத்தில் வீண் சர்ச்சை வேண்டாம் என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கருத்து தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

இந்திய அரசியல் சட்டத்தின் முதல் அட்டவணையின் முதல் பிரிவிலேயே, "இந்தியா அதாவது பாரத் மாநிலங்களை உள்ளடக்கியதாக இருக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பண்டையக் கால இலக்கியங்களிலேயே பாரத் என்றும் இருக்கிறது, இந்தியா என்றும் இருக்கிறது. மகாகவி பாரதியார்கூட தன் பாடல்களில், இரு பெயரையும் குறிப்பிட்டுள்ளார். ஆக. இரு பெயர்களின் பயன்பாடும் எந்தவித, பிரச்சினையும் இல்லாமல் இருந்தது.

இப்படி எந்த பிரச்சினையும் இல்லாத நேரத்தில், கடந்த மாதம் டெல்லியில் நடந்த ஜி20 நாடுகளின் மாநாட்டையொட்டி. ஜனாதிபதி திரவுபதி முர்மு அந்த நாடுகளின் தலைவர்களுக்கு அளித்த விருந்துக்கான அழைப்பிதழில், திரவுபதி முர்மு, பாரத் ஜனாதிபதி என்று குறிப்பிடப்பட்ட தும், மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடிக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த பெயர் பலகையில், இந்தியா என்பதற்கு பதிலாக பாரத் என்று போடப்பட்டு இருந்ததும் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், தேசிய கல்விக் கொள்கையின்படி, தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான கவுன்சில் பள்ளிக்கூடங்களில், அதாவது மத்திய கல்வித் திட்டத்தின் கீழ் செயல்படும் பள்ளிக்கூடங்களின் பாடத்திட்டங்களை மாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்காக, வரலாற்று ஆராய்ச்சி இந்திய கவுன்சில் உறுப்பினரான ஐசக் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. ஐசக் கேரள மாநிலம் கோட்டயத்தில் உள்ள சி.எம்.எஸ். கல்லூரியில் வரலாற்று பேராசிரியராக இருக்கிறார். ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர். 7 பேர் கொண்ட இந்த குழு அனைத்து பாடப்புத்தகங்களிலும், இந்தியா என்ற பெயருக்கு பதிலாக பாரத் என்ற பெயர் இருக்கவேண்டும் என்று ஒரு மனதாக பரிந்துரை செய்துள்ளது. இதற்காக பல காரணங்கள் அந்த பரிந்துரையில் கூறப்பட்டுள்ளன.

இந்திய அரசியல் சட்டத்தில் இருப்பதோடு மட்டுமல்லாமல், 7 ஆயிரம் ஆண்டுகள் பழமையான விஷ்ணு புராணத்தில் பாரத் என்ற பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவுக்குள் ஆங்கிலேயரின் கிழக்கு இந்திய கம்பெனி வந்த பிறகும், 1757ல் பிளாசி போருக்கு பிறகும்தான் இந்தியா என்ற பெயர் பயன்படுத்தப்பட தொடங்கியது.

எனவே, அனைத்து வகுப்புகளிலும் உள்ள மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களில் பாரத் என்ற பெயரே பயன்படுத்தப்படவேண்டும் என்பது உள்பட பல பரிந்துரைகள் கூறப்பட்டுள்ளன. இந்த பரிந்துரை குறித்து பாடப்புத்தகங்களை தயாரிக்கும் மத்திய அரசாங்கத்தின் அமைப்புதான் முடிவு எடுக்கவேண்டும்.

இந்த பிரச்சினை குறித்து 2020ம் ஆண்டிலேயே சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு வந்த போது, தலைமை நீதிபதி போப்டே, நமது அரசியல் சட்டத்தில் பாரத், இந்தியா இரு பெயர்களுமே இருக்கின்றன என்று குறிப்பிட்டு, மத்திய அரசாங்கத்தின் பரிசீலனைக்கு அனுப்பிவைத்தார். ஆக, இரு

பெயர்களையும் பயன்படுத்துவதில் எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால், இந்தியா என்ற பெயரை நீக்கிவிட்டு, பாரத் என்ற பெயரை மட்டும் தான் பயன்படுத்தவேண்டும் என்றால், அரசியல் சட்டத்தை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு திருத்தவேண்டும். அனைத்து பாஸ்போர்ட்டுகளிலும், ரிசர்வ் வங்கி பெயர், ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ் என்ற பெயர்கள் உள்பட, பல பெயர்களில் உள்ள இந்தியா என்ற பெயர் பாரத் என்று மாற்றப்பட வேண்டும். அதற்கு பதிலாக ஆங்கிலத்தில் இந்தியா, இந்தியில் பாரத் என்று இப்போது இருப்பதுபோல இரு பெயர்களுமே தொடர்ந்து இருந்து விட்டு போகட்டுமே என்ற கருத்தும் நிலவுகிறது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குற்றவாளிகளின் கூடாரமாக பா.ஜ.க. உள்ளது!

பகிரங்க கொலை மிரட்டல் விடுக்கும் பா.ஜ.க. கிரிமினல் எம்.எல்.ஏ.!

'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் கடும் கண்டனம்!

சென்னை, அக். 29-

ஜார்க்கண்ட் மாநில பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் குஷ்வாஹா சஷிபூஷன் மேத்தா என்பவர் ஒரு கொலை குற்றவாளி என்றும் அவர் தாடி வைப்பவர், தொப்பி அணிபவர், மாட்டிறைச்சி உண்பவர்களுக்கு எதிராக பகிரங்க கொலை மிரட்டல் விடுத்துள்ளார் என்று அவர் மீது நடவடிக்கை எடுக்காத பா.ஜ.க. அரசு மீது கடும் கண்டனம் தெரிவித்து 'தீக்கதிர்' நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

ஜார்க்கண்ட் மாநில பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் குஷ்வாஹா சஷி பூஷன் மேத்தா என்பவர் தாடி வைத்தவர்கள், தொப்பி அணி பவர்கள் அல்லது மாட்டிறைச்சி சாப்பிடுபவர்கள் இந்து மதத் தலங்களுக்கு அருகில் கண்டால் அடித்துக் கொல்லப்படுவார்கள் என்று பகிரங்க கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இஸ்லாமியர்களுக்கு எதிரான இந்த வெறித்தனமான பேச்சு சமூக வலைதளங்களில் பரவி வருவது ஆபத்தானது. அந்த சட்டமன்ற உறுப்பினர் ஒரு கிரிமினல். பள்ளி ஆசிரியர் ஒருவரை கொலை செய்த வழக்கில் 2012 ஆம்ஆண்டு கைதானவர். இருப்பினும் அப்போதைய பா.ஜ.க. ஆட்சியில் காவல் துறை போதிய ஆதாரத்தைத் திரட்டத்தவறிய தால் வழக்கில் இருந்து தப்பித்தார். இப்படிப்பட்ட கிரிமினலுக்கு 2019 சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிட பா.ஜ.க. வாய்ப்பு வழங்கியது என்றால் அக்கட்சியின் யோக்கியதையைப் புரிந்து கொள்ளலாம்.

தீக்கதிர்
2023 அக்டோபர் 29 சனிக்கிழமை
பாஜக எம்எல்ஏவின் வெறுப்பூட்டும் பேச்சு

தமிழகத்தில் மட்டுமல்ல, அகில இந்திய அளவில் குற்றவாளிகளின் கூடாரமாக பா.ஜ.க. உள்ளது. இதே ஜார்க்கண்ட் மாநிலத்தில் மாட்டிறைச்சி சாப்பிட்டதாகக் கூறி 22 வயதான மின்ஹாஸ் அன்சாரி என்ற இளைஞரை பா.ஜ.க. ஆட்சியின் போது 2016ல் மதவெறி யர்களோடு இணைந்து காவல்துறையினரே அடித்துக் கொன்றனர். மின்ஹாஸின் கதறல் களை போன் மூலம் அவரது குடும்பத்தினரைக் கேட்க வைத்து உளவியல் ரீதியாக சித்ரவதை செய்த கொடுமையை நாடு மறக்கவில்லை. வட இந்தியாவின் உத்தரப் பிரதேசம், மத்திய பிரதேசம், ஹரியானா உள்பட பல மாநிலங்களில் மாட்டிறைச்சி வைத்திருந்ததாக இஸ்லாமியர்கள் பலர் கடந்த காலங்களில் மத வெறியர்களால் அடித்துக் கொல்லப்பட்டுள்ளனர்.

வெறுப்புப் பேச்சுக்காக பா.ஜ.க. எம்.எல்.ஏ. மேத்தா மீது இதுவரை எப்.ஐ.ஆர் பதிவு செய்யப் படவில்லை. பா.ஜ.க.வுக்கு எதிரான ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா அரசு ஆட்சியில் இருந்தாலும் கூட (ஜே.எம்.எம்.) பா.ஜ.க. மீதான அதிகார வர்க்கத்தின் மென்மையான அணுகுமுறையே வழக்குப் பதிவு செய்ய தடையாக உள்ளது. வெறுக்கத்தக்க பேச்சுக்கள் மீது காவல்துறை தானாக முன்வந்து வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் உத்தரவு பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அமல்படுத்தப்படுவதில்லை.

மாநிலத்தில் ஆளும் கட்சியாக உள்ள ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா மற்றும் கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளும் மேத்தாவின் கருத்திற்கு கண்டனம் தெரிவித்துள்ளன. இதோடு நிறுத்திக் கொள்ளாமல் காவல்துறையை கொண்டு அவர் மீது உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். வெறி யூட்டும் கருத்துக்களை தெரிவிப்போர் யாராக இருந்தாலும் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்ற நிலையை உருவாக்குவதாக அந்த நடவடிக்கை அமைய வேண்டும்.

இவ்வாறு 'தீக்கதிர்' நாளேடு தனது கடும் கண்டனத்தை பதிவு செய்துள்ளது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

திருச்சி ஏ.வி. கிருஷ்ணமூர்த்தி
அக்டோபர் 29 (1995)

திருச்சி நகரக் கழகச் செயலாளராகவும் – நகர கூட்டுறவு வங்கியின் தலைவராகவும் பணியாற்றியவர்.

திருச்சி வெங்காயமண்டி பாரம் சுமக்கும் தொ.மு.ச. தலைவராகவும் – அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

ஆங்கிலத்தில் சிறப்பாகச் சொற்பொழிவாற்றக்கூடியவர்.

கொள்கை உறுதியும் – அடக்குமுறைகளைத் தாங்கும் நெஞ்சுரமும் கொண்டு திருச்சியில் கழகத்தை வளர்த்த இனிய உடன்பிறப்பு என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.